# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.179/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | வீரராகவன் SI | Prosecution | LW-11 as PW-1 |
| Father Name | தேச அரசன் | Defence | |
| Station | சீர்காழி PS | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 34/2026 |

Solemnly affirmed by Tmt.R.Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **24.03.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சீர்காழி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் சீர்காழி காவல் நிலையத்தில் பணியிலிருந்த உதவி ஆய்வாளராக பணியில் இருந்த சித்தார்த்தன் அவர்களின் கையெழுத்தும் கையொப்பமும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 18.06.2013 ஆம் தேதி மதியம் 13.00 மணியளவில் உதவி ஆய்வாளர் சித்தார்த்தன் காவல் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது லியாகத் அலி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று சீர்காழி காவல்நிலைய குற்ற எண்.260/2013 இ.த.ச பிரிவுகள் 457, 380 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார்தாரர் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சாஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

வழக்கு கோப்புகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு உதவி ஆய்வாளர் கடந்த 18.07.2013 ம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஹமீது மற்றும் ரெஜினா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி **ஆவணங்கள் அ.சாஆ 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின்

எதிரிகளை தேடிய நிலையில் கடந்த 20.06.2013 ம் தேதி மாலை 16.30 மணிக்கு சீர்காழி ரயில்வே ஸ்டேசன் அருகில் நின்று கொண்டிருந்த எதிரிகளை குற்ற காரணம் கூறி கைது செய்த போது எதிரிகள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராஜீ மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிகள் **அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தமிழரசன் மறைத்து வைத்திருந்த வழக்கு பொருளை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றதல் மகசர் தயார் செய்து தயார் செய்துள்ளார். அந்த கைப்பற்றுதல் **மகசர் அசாஆ. 6 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. கைது செய்யப்பட்ட எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். கைப்பற்றப்பட்ட வழக்கு பொருளை படிவம் 95 மூலம் CP.144/2013 ஆக நீதிமன்றம் வசம் ஒப்படைத்துள்ளார். **அந்த படிவம் 95 அசாஆ.7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. எதிரிகள் மீதான வழக்கு விசாரணையை முடித்து கடந்த 25.07.2013 ம் தேதி எதிரிகளுக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 457, 380 கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் நான் நேரடியான சாட்சி இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் நேரடி புலனாய்வு அதிகாரி சித்தார்த் என்றால் சரிதான். ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதனான். இந்த வழக்கில் புலனாய்வு அதிகாரி மற்றும் காவல் நிலைய பொருப்பு அதிகாரிக்கும் சேர்த்து நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் எந்த சாட்சியையும் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் எதிரிகள் தானே முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பார்வை மகசர், வரைபடம், அனைத்தும் சம்பவ இடத்திற்கு செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காணாமல் போனதாக சொல்லப்படும் வீட்டின் பக்கத்து வீட்டுகாரர் தான் இந்த வழக்கின் புகார்தாரர் என்றால்

சரிதான்.

மேற்படி புகார்தாரர் ஆஜர் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வேறு சாட்சிகள் யாரும் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் வழக்கை சரியாக விசாரணை செய்யாமல் பொய்யாக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆவணத்தை மட்டும் பார்த்து நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் மொத்தம் 3 எதிரிகள் அதில் 2 எதிரிகள் குற்றம் நிறுபிக்கப்படாமல் விடுதலையாகிவிட்டனர் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**